
# வேலணை பெருங்குளம் முத்துமாரி அன்னை பதிகம்



இது ஒரு மறுபிரசுரம்

## தொகுப்பாசிரியர்

கவிதாவாரிதி

வேலணையூர் பொன்னண்ணா அவர்கள்

அறிவகம் - டென்மார்க்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீராதநோய் தீர்க்கும்
## ஸ்ரீலஸ்ரீ
# வேலணை பெருங்குளம் முத்துமாரி
# அன்னை பதிகம்



**ஆசிரியர்கள்**

திரு. க. சோமசுந்தரப் புலவர் அவர்கள்
பண்டிதமணி, பிரம்மஸ்ரீ. சு. நவநீதகிருஷ்ணபாரதியார் அவர்கள்
வித்துவமணி, பிரம்மஸ்ரீ. சி. கணேசையர் அவர்கள்
ஆசிரியர் பொன். ஜெகந்நாதன் அவர்கள்
பொலிஸ் பென்சனியர், வேலாயுதர் சின்னத்தம்பி அவர்கள்

வெளியீடு : 06 - 08 - 1951 - 17 - 02 - 1979
இது ஒரு மறுபிரசுரம்

தொகுப்பாசிரியர்
கவிதாவாரிதி
வேலணையூர் பொன்னண்ணா அவர்கள்
அறிவகம் – டென்மார்க்

*பொன்மணி வெளியீட்டகம்*
*அறிவகம் - டென்மார்க்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிப்பாசிரியர் உள்ளத்தில் இருந்து மீள்பதிப்பு நூல் பற்றி...

அன்புள்ள வாசகப்பெருமக்களே...! அம்பிகை அடியார்களே...!

உங்களோடு ஒரு நிமிடம் .....

யாழ்ப்பாண மாவட்டத்தின் ஒருபகுதியான தீவுகளின் நடுநாயக பதியான வேலணைப் பதியில் பெருங்குளத்தின் தென்கரையில் குடிகொண்டு நம்பினாரை நாடிவித்து தொண்டனாய் ஏற்று அருள் வளம் காட்டி அருளாச்சி புரியும், அன்னை முத்துமாரியின் அருள் கருணையால் பக்திகொண்ட பல அறிஞர்கள் பலரால் முன்னும் அன்னையின் பெயரால் பல அறிஞர்கள், வித்துவான்கள், பண்டிதர்கள், பேராசிரியர்கள் இணைந்து அன்னையின் பெருமையை அன்னைமுத்துமாரியின் அருள்சக்தியை பாடலாக்கி உள்ளார்கள். ஆனால் அந்த நூல்களின் மதிப்பை அதில் பொதிந்து கிடக்கும் கருத்தை அன்னையை ஆலாபரணம் செய்து பதிவு செய்த அன்னையின் வரலாற்றை வெளிப்படுத்தும், நூல்களை பொக்கிஷங்களை பாதுகாத்து காப்பாற்றி அடுத்த சந்ததியிடம் கொடுக்க அன்றைய ஆலய நிர்வாகம் தவற விட்டுவிட்டது. அதனால் அந்த பத்தியின் பயன் சக்தி கொண்ட அரும் பொக்கிஷங்களை நம்மால் அங்கு வாழும் காலத்தில் பெற்று படிக்க முடியவில்லை.

1951, 1972 போன்ற காலகட்டத்தில் எம் தாய்மண் பிறந்து வளர்ந்த வாழ்ந்த பெரும் மதிப்புமிக்க அம்பிகையின் அரும்பணித் பெரியார்களான திரு. க. சோமசுந்தரப் புலவர் அவர்கள், பண்டிதமணி பிரமஸ்ரீ சு. நவநீத கிருஸ்ண பாரதியார் அவர்கள். வித்துவமணி பிரமஸ்ரீ சி. கணேசையர் அவர்கள். ஆசிரியர் பண்டிதர் ஜெகநாதன் அவர்கள் போன்ற அன்றைய அறிஞர் பெரியார்களோடு அன்றைய காவல்துறையில் பணியாற்றி இளைபாறிய எமது கிராமத்து இலக்கிய வாதியான பென்சனியர் வேலாயுதர் சின்னத்தம்பி என்ற பெரியாரும் அம்பிகை பற்றி அரும்பெரும் கருத்துக்களை பாடலாக்கி உள்ளர்கள். அவர்களின் சந்ததி இன்னும் நம்மிடையே இருக்கலாம். அவர்களின் கருத்தை நாம் கட்டிக் காப்பாற்ற வேண்டியது நம் அனைவரின் கட்டாய கடமை. அதன் அடிப்படையிலே தான் அன்னை எமக்கு இத்தகைய பாடல் அடங்கிய அன்னை முத்துமாரி காவியங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலத்தின் வேகத்தால் சுாக்கும் கருத்தற்ற காரணத்தால் கரைந்து அழிந்து கண்ணுக்கு தெரியாது மறைந்து போயிருந்த இந்த அம்பிகையின் பழமை வாய்ந்த வரலாற்றை, எமது மண்ணின் மைந்தர்களின் அருமை, பெருமை, அவர்களின் வல்லமை எவருக்கும் அறியமுடியாது அழிந்து போய் விடாமல் கட்டிக்காக்கும் எண்ணத்தோடு அன்னை முத்துமாரி ஆவணங்களை கண்டம் மாறினாலும் கரைந்து போகாமல் மீட்டல்செய்து தந்துள்ளார்.

ஆகவே அன்னை முத்துமாரியால் அது எங்கோ ஒரு மூலையில் பாதுகாக்கப்பட்டு காலம் கனியும்வரை அமெரிக்க கண்டத்தில் கனடாபதியில் வாழும் ஒரு நயினை அம்மையின் அடியாள் பாதுகாத்து வைத்து, இன்று என்னிடம் இதையும் வெளியிட்டால் அன்னையின் சக்தி உலகறியும் என்ற வாக்கியத்தோடு அனுப்பி இருந்தார். அந்த அன்னையின் வாக்கை அன்னை முத்துமாரியின் வாக்காய் எண்ணி ஒருநூற்றாண்டு கடந்த இந்த பதிகங்களை மீள்பிரசுரம் செய்யும் நோக்கில், புதிய பதிப்பாக்கி உங்கள் கரமெட்டச் செய்துள்ளேன். ஏற்பாள் அன்னை முத்துமாரி என்ற பூரண நம்பிக்கையோடு.

தீவகத்திலுள்ள அம்பிகை ஆலயங்கள் அனைத்திலும் பாதுகாத்து குவிந்து கிடக்கும் அம்பாள் பதிகங்களை கண்ணுற்ற போது, பெருங்குளத்தாளின் பெருமைக்கு எதுவும் இல்லையே என தேடியபோது, அம்பாள் அருளிய புதையல் இவை என எண்ணத்தோன்றுகிறது. இப்பதிகங்கள் என்றும் அம்பிகை அடியார்களால் பாதுகாத்து அடுத்தடுத்த பரம்பரைக்கு நம்சொத்தாக்கி செல்வது எமது கட்டாய கடமையாகும். இதுமட்டுமல்லாது இராஜகோபுர தரிசனத்தோடு பரிணாம வளர்ச்சி காணும் அன்னை முத்துமாரி பதிகங்கள் மூலமும் வளர்ச்சி காணுகின்றாள். **அருளமுதம், தலபுராணம், வேலணை பெருங்குளம் முத்துமாரி அன்னை பதிகம், வெண்ணீற்றின் பெருமை** என்று அன்னையின் மகிமைகள் பாடலாகி பெருகி வருவது இன்றைய சூழ்நிலையில் இதுவும் ஒரு அன்னை முத்துமாரியின் அற்புத செயல்பாடே எனலாம்.

நன்றி வணக்கம் !

*அன்புடன்*

*பதிப்பாசிரியர்,*

***கவிதாவாரிதி வேலணையூர் பொன்னண்ணா***

*அறிவகம் – டென்மார்க்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மதிப்புரை

## வெண்பா

முன்மணிகள் சேர்த்துமுத்து மாரிக்குத் தோத்திரங்கள்
செம்மையுறச் செய்தார் செகந்நாதன் - இம்மையினும்
அம்மையினும் நன்மைபெற அச்சியற்றித் தந்த இது
வெம்மைப் பிறவியறும் வித்து.

**சி. கணபதிப்பிள்ளை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

<u>பெரியநாயகி பிரசுரம் 3.</u>

ஓம் சக்தி ! ஓம் சக்தி ! ! ஓம் சக்தி ! ! !

# வேலணையூர் முத்துமாரியன்னை பதிகம்

"முத்துமாரி இது கேட்டு முடியசைக்கவேண்டும்"

(புலவர் க. சோ.)

பாடல் ஆசிரியர் :

1. திரு. க. சோமசுந்தரப்புலவர் அவர்கள்
2. பண்டிதமணி, பிரம்மஸ்ரீ
   சு. நவநீதகிருஷ்ணபாரதியார் அவர்கள்
3. வித்துவமணி, பிரம்மஸ்ரீ
   சி. கணேசையர் அவர்கள்

பதிப்பாசிரியர் :

பொ. சேகந்நாதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்

# பிள்ளையார் வணக்கம்

## வெண்பா

சிந்தை களிகூரச் செய்கருமம் கைகூட
முந்துவினை வேரோடு முற்றழிய - தந்தமொன்று
தொந்தி வயிற்றோனை தும்பிக்கைத் தூயோனை
வந்திப்போம் உள்ளம் மலர்ந்து

## ஏற்புடைக் கடவுள் வணக்கம்

வேலணையூர் வாழ விளங்குமுத்து மாரியுமை
பாலணையும் பாக்கள் பதிகமுடன் - சாலவே
நின்று பயனார்ந்து நீள் நிலத்தில் ஓங்கவருள்
நன்றாகச் செய்வாள் நயந்து

# முகவுரை

## (1 - ம் பதிப்பு)

வேலணையூர், யாழ்ப்பாணத்துக்கு அண்மையில் விளங்கும் ஏழுதீவு நாடுகளுள் "லைடன்" தீவைச் சேர்ந்ததாகும். இது யாழ்ப்பாணப் பட்டினத்தில் இருந்து ஏறக்குறைய ஏழு மைல்வரை தென்திசைத் தொலைவில் உள்ளது. இவ்வூரின் கீழைப்பாலேயுள்ள பெருங்குளத்தின் கரையிலேதான் "வேலணைப் பெருங்குளம் முத்துமாரியம்மன்" வீற்றிருக்கின்றாள். இவ்வம்மன் மேலேதான் இப்பதிகம் முதலிய பாடல்கள் பாடப்பெற்றவை.

தெய்வத்தை மக்கள் வழிபடுகின்றனர். ஆனால் அவ்வத் தெய்வத்துக் கேற்ற நன்பாடல்களைச் சொல்லி, நற் கருத்துக்களைச் சொல்லி வணங்குவோர் - வழிபடுவோர் எல்லாருமல்லர். அம்முறை தெரிந்து வழிபாடு செய்வார் சிலினும் சிலரே. இந்நூல் இந்தவகையில் யாதும் சொற்பமேனும் உபகாரமாயிருத்தல் கூடும் என்பது எமது எண்ணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வம்மையின் மேற்பாடப்பட்ட இப்பதிகப் பாடல்களில் வைத்து இப்பாடல் ஆசிரியன்மார் தமது யாப்பு - சொல் - பொருள் என்பவைகளின் திறப்பாட்டால் இலக்கிய நயங்களைக் கிண்டி விட்டிருக்கின்றார்கள் ! அதனால் அவை அம்மன் பக்தி பாவத்தோடு இலக்கிய இரசிகத்தையும் கொடுக்கவல்லனவாகின்றன. இவர்கள் ஒவ்வொருவர் கண்ட கருத்துக்களும் பாடலின் போக்குகளும் ஒவ்வொரு வகையாக அமைந்துள்ளன, அவற்றை அவ்வவ்விடங்களிலே கண்டுகொள்க. இந்நூல் இவ்வம்மன் பக்திப்பாடல்களைக் கொண்ட ஒரு நூலாவதோடு "தெய்வம் பரவுதல்" என்னும் தமிழ்த்துறையில் ஒரு சிறு இலக்கிய நூலாகவும் அமைவது ஒன்றாகும்.

இப்பாடல்களோடு இவற்றின்பின் வந்து சேர்ந்துள்ள பாடல்களையும் இவை அனைத்துக்கும் அரும்பதவுரையையும் சேர்த்து மறுபதிப்பில் வெளியிட எண்ணியுள்ளோம். எல்லாவற்றுக்கும் நமது ஜெனனவூரிற் கோயில் கொண்டு, நமதும், நம்முன்னோர், பின்னோரதும் வழிபாட்டுக்கிரங்கி அருள்புரி வேலணையூர்ப் பெருங்குளத்துப் பெரியநாயகி துணை செய்வாளாக. இப்பாடல்கள் கிடைத்துள்ள ஒழுங்கின்படியே சேர்க்கப்பட்டுள்ளன. இப்பாடல்களையும் இவற்றின் தொடர்பாயுள்ள பிறபாடல்களையும் பாடித்தந்த பெரியார்பால் யாம் என்றும் நன்றியுடையோம்.

கொக்குவில் வாழ்நரும் சிவநேயச் செல்வருமான திரு. த. குமாரசுவாமிப்பிள்ளையவர்கள் எமது பாடல்களைப் பார்வையிட்டு இசையிலும் பொருளிலும் திருத்தங்கள் செய்து தந்துள்ளனர். அவர்கள் நன்றியை யாம் நன்று போற்றுதும், இப்புத்தகத்தை இவ்வளவு உயர்ந்தமுறையில் அழகுற அச்சிட்டுத்தந்த விவேகானந்த அச்சுக்கூடத்தார்க்கும் என் மனமார்ந்த நன்றியைச் செலுத்துகின்றேன்.

**இந்து ஆங்கில வித்தியாசாலை** **பொ. செகந்நாதன்**
திருநெல்வேலி கிழக்கு
யாழ்ப்பாணம் (Ceylon)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிள்ளையார் வணக்கம்

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தி னிளம்பிறை போலு மெயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினை
புந்தியில் வைத்தடி போற்றுகின் றேனே.

*திருமூலர் திருமந்திரம் திருமுறை 10*

## சிவபெருமான் வணக்கம்

கரவாடும் வன்நெஞ்சர்க் (கு) அரியானைக் கரவார்பால்
விரலாடும் பெருமானை விடையேறும் வித்தகனை
அரவாடச் சடைதாழ அங்கையினில் அனல் ஏந்தி
இரவாடும் பெருமானை என் மனத்தே வைத்தேனே.

*திருநாவுக்கரசுநாயனார் தேவாரம் திருமுறை 4*
*திருக்கச்சியேகம்பம்*

## திருமுருகன் வணக்கம்

உன்னை யொழிய ஒருவரையும் நம்புகிலேன்
பின்னை ஒருவரையான் பின்செல்கேன் - பன்னிருகைக்
கோலப்பா வுனோர் கொடியவினை தீர்த்தருளும்
வேலப்பா செந்தி வாழ்வே

*நக்கீரர் திருமுருகாற்றுப்படை திருமுறை 11*

## சரஸ்வதி வணக்கம்

நாடும் பொருட்சுவை சொற்சுவை தோய்தர நாற்கவியும்
பாடும் பணியிற் பணித்தருள் வாய்பங்க யாசனத்திற்
கூடும் பசும்பொற் கொடியே கனதனக் குன்றுமைம்பாற்
காடுஞ் சுமக்குங் கரும்பே சகல கலாவல்லியே.

*குமரகுருபரர் சகல கலாவல்லி மாலை*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீனாட்சியம்மை வணக்கம்

பன்னிருசீர்க கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

"தொடுக்குங் கடவுட் பழம்பாடற்
றொடையின் பயனே நறைபழுத்த
துறைத்தீந் தமிழி னொழுகுநறுஞ்
சுவையே யகந்தைக் கிழங்கையகழ்ந்
தெடுக்குந் தொழும்ப ருளக்கோயிற்
கேற்றும் விளக்கே வளர்சிமய
இமயப் பொருப்பில் விளையாடு
மிளமென் பிடியே யெறிதரங்கம்
முடுக்கும் புவனங் கடந்துநின்ற
வொருவன் திருவுள் ளத்திலழ
கொழுக வெழுதிப் பார்த்திருக்கு
முயிரோ வியமே மதுகரம்வாய்
மடுக்குங் குழற்கா டேந்துமிள
வஞ்சிக் கொடியே வருகவே
மலயத் துவசன் பெற்றபெரு
வாழ்வே வருக வருகவே.

இப்பாடல் மதுரை மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழில் வருகைப் பருவத்து செய்யுளாக உள்ளது. இதனைப் பாடியவர் குமரகுருபரசுவாமிகள். இவர் மதுரை மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ் பாடியிட்டதை அவ்வம்மையின் அருளால் அறிந்த இவர் காலத்து அரசராகிய திருமலைநாயக்கர் அப் பிள்ளைத்தமிழை அவ்வம்மையார் சன்னிதியில் அரங்கேற்று வித்சனர் என்றும், அப்பொழுது இப்பாடலுக்குக் குமரகுருபரர் பொருளுரைக்கும்பொழுது மீனாட்சியம்மையார் அக்கோயில் அர்ச்சகரது பெண்போன்று திருக்கோலங் கொண்டு அரசர் கழுத்திலிருந்த பணிவடத்தைக் கழற்றிக் குமரகுருபரர் கழுத்திலிட்டு மறைந்தருளினர் என்றும் இதன் வரலாறு கூறும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருணைக் கடலே கடல்வரு மமுதே
யமுதிற் கனிசுவையே
கங்கைச் சடையவர் பங்கிற் சூலவிடு
கற்பக நற்கனியே
இருமைக் கும்மருள் தருமெய்ப் பொருளே
யெங்களை யீன்றவளே
ஏழைக் குற்றிடு மின்னல் தவிர்த்தே
இன்ப நலங்காட்டிக்
கருமைக் குந்தள சாமள மேனிக்
கன்னிக் கோமளமே
கல்லா நாயேன் பிழைகள் பொறுத்துன்
காட்சி யளித்தருள்வாய்
வருமைக் குயிலே மரகத மயிலே
பெரிய குளம்மருவும்
வன்னத் துடியிடை கன்னிப் பிடிநடை
மாமா ரித்தாயே

உற்றாள் நீயே உறவினர் நீயே
உடையா ளும்நீயே
உலகத் தொகுதியு முயிரின் தொகுதியு
மொவ்வோர் காலத்துப்
பெற்றா ளும்நீ பெறுவா ளும்நீ
பேணி வளர்ப்பவள் நீ
பிறையணி சடிலக் கடவு ளிடத்துப்
பெரிய பிராட்டி நீ
சற்றே னும்மெய்ப் பக்தி யிலாதேன்
தவறு பொறுத்தருள்வாய்
கண்டமிழ் நாவலர் பாவுக் கின்னருள்
தந்தருள் சுந்தரியே
மற்றோ ரறியா மரகத மலையே
வளமார் பெரியகுளம்
மருவுந் துடியிடை யொருவும் பிடிநடை
மாமா ரித்தாயே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
திருச்சிற்றம்பலம்



# வேலணை பெருங்குளத்து

# முத்துமாரியம்மன் திருப்பதிகம்

நவாலியூர், திரு. க. சோமசுந்தரப்புலவர் பாடியது

## காப்பு

தேவாரும் வேலணையூர் சேரும் பெருங்குளத்து
மாமாரி யம்மைபா மாலைசொலத் தூவாரும்
ஐந்துகரத் தொந்திவயிற் றந்திநிறத் தித்துமுடித்
தந்திமுகன் பாதஞ் சரண்.

மேதகுசீர் வேலணையூர் மேவும் பெருங்குளத்து
மாதரசி முத்தம்மை மாலைதரும் - ஆதரவாய்
ஊனா ருயிருக் குரையாகி நாவிலுறை
மானார் கமலவிழி மான்

சீர்மேவு வேலணையூர்த் தெய்வப் பெருங்குளத்து
மாமாரி யம்மைதமிழ் வந்திடவே - பூமீதில்
வெய்ய வினையகல மெய்ம்மொழியை முன்னருளும்
ஐயன் பதம்பணிகு வாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூல்

பொன்னார் நவமணி மகுட மிலங்கும்
பூரண மதிமுகமும்
பொல்லா மும்மல வேரற வருண்மழை
பொழியுந் திருவிழியும்
மின்னார் பொன்னரி மாலை சரப்பளி
மேவும் மணிமார்பும்
வேண்டிய வீயும் வரதமு மஞ்சலை
விடுவிக் குங்கரமும்
பின்னுஞ் சடையும் பொன்னங் குழையும்
பீதாம் பரவுடையும்
பிரசத் தாமரை யடியுங் கண்டருள்
பெறுமா ளெந்நாளோ
மன்னார் மங்க வடிவங் கொண்டுயர்
பெரிய குளம்மருவும்
வன்னத் துடியிடை கன்னிப் பிடிநடை
மாமா ரித்தாயே.

அஞ்சும் பலபல பிறவி யெடுத்தே
அம்மா அலமந்தேன்
ஆறாத் துயரம் நீர்ந்திட வேறார்
அவனி தலத்துள்ளார்
பஞ்சு படாப் பெரும்பாடுகள் பட்டேன்
பட்டமுடி யாதினிநான்
பாவக் கொடுவினை ஓயக் கருணைசெய்
பரம தயாநிதியே
விஞ்சும் மிடியாற் பிணியா லடியேன்
மெலிவது மினிமுறையோ
வேதப் பொருளே நாதப் பரிவுர
மென்மல ரடிதருவாய்
வஞ்சிக் கொடியே கொஞ்சுங் கிளியே
பெரிய குளம்மருவும்
வன்னத் துடியிடை கன்னிப் பிடிநடை
மாமா ரித்தாயே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்னி னற்சே வடிகள் வணங்கச்
செவியுன் புகழ்கேட்கத்
திருவிழி யுன்ற னருளுரு வென்றும்
தெரிசித் திடநாளும்
பன்னிய செந்நா வுன்றிரு நாமம்
பயிலச் செய்யகரம்
பாமல ரோடு பூமலர் சூடப்
பாதம் வலம்வரவே
தன்னிகர் நீறு வடிவி லணிந்துன்
தலமதி யேயுருளச்
சங்கரி சோதரி மாதவி
சாம்பவி காம்பனதோள்
மன்னிய சிந்தா மணியே பிறவி
மருந்தே பெரியகுளம்
மருவுந் துடியிடை பொருவும் பிடிநடை
மாமா ரித்தாயே.

வந்திடு வல்வினை போகும் வருவினை
மருவா தேயேகும்
வஞ்சனை பில்லிகள் சூனிய மாகிய
வாரா பிணிசேரா
முந்திய மும்மல வேதனை யொழியும்
மொழியும் மெஞ்ஞான
மூதறி வோங்கு முன்னை நினைத்தவர்
முந்தியு மெய்துவரால்
இந்தணி யுஞ்சடை நந்தரி சோதரி
யின்பருள் சுகவாரி
ஏகி பினாகி வராகி சுபோகியீ
சானி மனோன்மணியே
மந்திர ரூபிணி காரணி யாரணி
மருவும் பெரியகுளம்
வன்னத் துடியிடை சன்னிப் பிடிநடை
மாமா ரித்தாயே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தனியன்கள் (வேறு)

பஞ்சாக் கரியே சரணஞ் சரணம்
பாவாய் சரணம் பூவாய் சரணம்
பதுமா சனியே சரணஞ் சரணம்
பலகா ரணியே சரணஞ் சரணம்
எஞ்சா நிதியே சரணஞ் சரணம்
இறவாக் கதியே சரணஞ் சரணம்
ஏடார் மனமே சரணஞ் சரணம்
எம்தாய் சரணம் தந்தாய் சரணம்
நஞ்சார் கண்டச் சஞ்சீ வினியே
நங்காய் சரணம் மங்காய் சரணம்
நத்தா வொளியே சிந்தா மணியே
நல்லாய் சரணம் பொல்லாய் சரணம்
மஞ்சேர் கொடையாய் எஞ்சா விடையாய்
மானே தேனே சரணஞ் சரணம்
மருவுந் துடியிடை பொருவும் பிடிநடை
மாமா ரித்தாய் சரணஞ் சரணம்

அருள்சேர் காஞ்சித் திருநகரில்
அந்நாள் முப்பா னீரறமும்
அம்மா புரிந்தாய் ஏழையெனக்
கருளா திருத்தல் விதிவசமோ
மருள்சேர் மறையோன் பெரியபவம்
மாய்த்தா யென்பா லருளிலையோ
மடநா ரைக்கன் றருளினையால்
மனித னெனக்குள் ளருளிலையோ
இருள்சேர் நஞ்சம் அருந்தினையால்
எனது பாவம் அருந்திலையோ
எறும்சேர் பன்றிக் குட்டிகளுக்
கின்பால் ஈந்தாய் எனக்கிலையோ
மருள்சேர் பிறவி மாய்த்தெனக்கு
வரமீ மருவும் பெரியகுளம்
வாழி முத்து மாரி யம்மை
வாழி வாழி வாழியே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொன்றைச் சடைமுடி யாடக் குளிர்மதி
யாடக் குழையாடக்
கோலத் திருவிழி யாடக் குறுநகை
யாடப் புனலாட
வென்றிச் சூடக பாடக மாடிட
மேகலை வடமாட
வேம்பின் தழைபொதி கரகமு மாடிட
விரையார் கரமாட
எண்டிக் குங்களி பாடிட வெவ்வினை
ஏங்கி யிரிந்தோட
இன்புறு தொண்டர்க ளாடிட வந்துயர்
இன்ப சுகந்தருவாய்
மன்றிற் றிருநட மாடிடு மைங்கர
மணியே பெரியகுளம்
மருவுந் துடியிடை பொருவும் பிடிநடை
மாமா ரித்தாயே.

வஞ்சனை சூது பொறாமை முதற்பல
மாசுடை யோருடனே
மருவா தன்னடி யாரொடு மருவும்
வாழ்வை யெமக் கருள்வாய்
அஞ்சு மவித்தவர் நெஞ்சினி லூறிடு
மானந் தத்தேனே
அம்பிகை தும்பிகை யானையை யன்றருள்
ஆயீ மகமாயி
கஞ்ச மலர்த்திரு செஞ்சொன் மணித்திரு
கண்ணா கியவுருவே
காஞ்சிகா மாட்சி மதுரைமீ னாட்சி
காசி விசாலாட்சி
மஞ்சணி குடுமிப் பனிமலை மகளே
வளரும் பெரியகுளம்
மருவுந் துடியிடை பொருவும் பிடிநடை
மாமா ரித்தாயே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னாய் வருக அரசி வருக
அம்மா நீவருக
ஆறார் சடையார் கூறாய் வருக
ஆறு முகப்பொருளாம்
என்னா யகனைத் தந்தாய் வருக
இறைவிவருக மறையோதும்
ஈறாய் நடுவாய் முதலா மியைவாய்
இனியாய் நீவருக
முன்னா முதல்வி பின்னா முடிவி
மூவா ஆனந்த
முத்தே வருக வித்தே வருக
முப்புரை யேவருக
மன்னா ருயிருக் கின்னா ருயிரே
வருக பெரியகுளம்
மருவுந் துடியிடை பொருவும் பிடிநடை
மாமா ரித்தாயே.

பொன்னெனு மாமழை மாதமும் மாரி
பொழிந்து பொலிந்திடவே
பூதல மெங்கும் நோய்மிடி மாறிப்
புதுவாழ் வெய்திடவே
மன்னிய கண்மணி நீறுபஞ் சாக்கர
மந்திரம் வாழியவே
மாமறை யாகம நீதி பரம்புக
மாசனம் வாழியவே
பன்னி தொண்டர்க ளுன்னிய பெற்றே
பரிவொடும் வாழியவே
பாடிய தமிழும் பாடுவித் தோரும்
பன்னாள் வாழியவே
செந்நெற் கழனிகள் புடைசூழ் வேலணை
சேரும் பெரியகுளத்
தேவிமா மாரியும் வாழிய வாழிய
திருவருள் வாழியவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பஞ்சவிரத்தின மாலை

பண்டிதமணி க. சு. நவநீதகிருஷ்ண பாரதியார் அவர்கள் பாடியது.

நித்யகல் யாணியே நிம்பதள பாணியே
நெஞ்சிரு ளகற்றுவிக்கு
நீதியே நீதிதரு சோதியே ஆதியே!
நீங்காத வோங்காரியே
சித்தங் குளிர்ந்துடல் குளிர்ந்தம்மை முதலாய
தீராத கொடியநோய்கள்
தீரக் களைந்திடர் தீரப் புரிந்தருள்
தெய்வவைத் தியநாயகீ
கத்துபடல் சூழுலகில் கண்கண்ட தெய்வமே
கைவலய சஞ்சீவியே
காருண்ய வெள்ளமே கற்பூர தீபமே
கலாதீத மானபொருளே
உத்தமீ ரிற்பரா சக்தியே முத்திக்
கொருமூல மானவித்தே
ஒருங்குள வளங்குலவு பெருங்குள மமர்ந்தருளு
மொண்முத்து மாரியுமையே.

உள்ளத்தி லேகள்ளம் இல்லாத இன்சொலும்
உயர்வுகுணச் செம்மைவாழ்வும்
உத்தமர் இணக்கமும் கல்வியும் செல்வமும்
உன் உபய பாதமலரில்
பள்ளத்திலேபாயும் வெள்ளப் பெருக்கெனப்
பறந்துவீழ்ந் தன்புசெய்யும்
பாக்கிய மெலாங்கொடுத் தன்பரைக் காத்துவரு
பச்சைப்பசுங் கொண்டலே
தெள்ளத் செளிந்துவரு தேறலே தேறலில்
தித்திக்கு மின்பரசமே
செந்தமிழ்க் கிள்ளையே சேரிசைப் பூங்குயில்
திருநடன மாடுமயிலே
உள்ளிய வுவந்துதவு வள்ளியோர் வாழ்வினுக்
குறைபதிய தாகவுன்னி
ஒருங்குள வளங்குலவு பெருங்குள மமர்ந்தருளு
மொண்முத்து மாரியுமையே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாதமுத லாகியுள தத்துவங்க டளைக்கடந்த
நாத னோடும்
பேதமிலா துறைகின்ற பராபரையின் கூறாகும்
பெரிய தாயே
ஓதுமுத்து மாரியெனு முத்தமியே யுன்பாத
முற்றே மம்யே
பாதகங்க டீர்த்தெம்மை யாண்டுமிக னின்னருளைப்
பாலிப் பாயே
வேலணையூர் தழைத்தோங்க மேவுமுத்து மாரியெனு
மெய்மைத் தாயே
ஆலமுறுங் கண்டனார் பாகமுறுந் தேவிகன
தம்ச மானோய்!
காலனார் செயுமிடரும் தீவினையின் பெருந்துயரும்
கடிந்தே யெம்மைச்
சீலமுடன் வாழவருள் புரிவாயுன் திருவடிகள்
போற்றி போற்றி.

## வேறு

தேவியே போற்றி யெங்கள் செல்வமே போற்றி தீய
பாவியேன் பிணிகள் தீர்க்கும் பராபரைத் தாயே போற்றி
ஆவியா யுடலாய் நிற்கு மம்மையே போற்றி போற்றி
மேவிய பெருங்கு ளத்து விமலையே போற்றி போற்றி

## பதிகம் முதலியவற்றின் வரலாறு

### அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

உத்தமியை வேலணையே பெருங்குளத்தங் கரையிலிருந்து
உலகம் ஓம்பும்
முத்துமாரி யெவ்வுலகுந் தொழுதேத்து முதல்விதனை
முறைமை நாடிப்
பத்திமையாற் பாடுகெனத் தமிழ்நாட்டே பெரும்புலமைப்
பரிசு பெற்ற
வித்தரை முயன்றுகண்டு வேண்டினோம் ஆங்கவர்தாம்
விழைந்த அன்பால்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈரா றிதழ்நடுவில் இரீங்கார ஓசையாய்
இணைந்துவரு மந்த்ரரூபி
ஈறாகு மூழியில் ஈசநட னங்காண
இருக்கின்றசான் றுமாவாய்
நேரா வரக்கர்குலக் கானெலா நீறாக
நின்றெரிக்குந் நெருப்பே
நிலவுகட லெழுநஞ்ச மமுதமா வுட்கொண்டு
நீனவிசும் பளித்தவருளே
ஆராத அமுதமே தீராத செல்வமே
அன்பரிற் பேரன்புசெய்
அம்மையே இம்மையே செம்மையே நன்மைசெய்
அகரவுரு வானபொருளே
ஓராத மூவர்க்கரு முய்யவே படியளித்
துலகமா தாவாகினாய்
ஒருங்குள வளங்குலவு பெருங்குள மமர்ந்தருளு
மொண்முத்து மாரியுமையே.

காழிவரு மாமழலை வாய்மலரின் முத்தமிழ்
கனிந்தளு னங்குழைத்துக்
கருணையுடன் அமுதூட்டி உலகெலா முய்யவருள்
கலசக் கடைக்கணாட்டி
ஆழிகைக் கொண்டருளு நாரணி பூரணி
ஆரணி மாதங்கியே
ஆனந்த வல்லியே மாமேரு வில்லியே
அற்புக மாபைரவி
வாழையடி வாழையாய் அன்பர்கள் மரபெலாம்
வாழவே வரங்கொடுப்பாய்
மகத்துவத் தத்துவத் துச்சியின் ஒளிவிடும்
மங்காத சூளாமணி
ஊழையும் உப்பக்கங் காண்கென அன்பருக்
குபாயமுங் காட்டியருள்வோய்
ஒருங்குள வளங்குலவு பெருங்குள மமர்ந்தருளு
மொண்முத்து மாரியுமையே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனையெள்ளி நகையாடி இன்னல்செய் வாரன்றி
இங்கெவர் இரங்கவல்லார்
இத்தனையுங் கண்ணாரக் கண்டுகேட்டிருந்தாலு
மேழையே னுணர்ச்சிகொள்ளேன்
தினையளவு முனதருளைச் சிந்தியா மூர்கனேன்
செய்நன்றி கொன்றுவாழ்வேன்
சிறியனேன் என்றாலுஞ் சேயனான் பெற்றதாய்ச்
செல்விநீ யாதலாலே
நனவிலுங் கனவிலும் வெயிலிலும் நிழலிலும்
நயப்பிலும் வெறுப்பிலுமுன்
நந்தாத சீர்த்தியை நானில மெலாமுய்ய
நாயினேன் நாடி நாடி
உனதருளை உன்னினைந் துருகிநான் பாடவே
ஊத்தையேற் கருள்புரிகுவாய்
ஒருங்குள வளங்குலவு பெருங்குள மமர்ந்தருளு
மொண்முத்து மாரியுமையே.

பொன்னம் பலத்திலைப் பூங்கொடியாள் வேண்டுகைக்காப்
பன்னும் பனுவ லதுபகர்ந்தேன் - என்றுஞ்சீர்
மன்னுமுத்து மாரியம்மை வாழ்வழிக்கும் பாதமலர்
என்னுளத்தே பூத்திருக்க அங்கு

## தோத்திரம்

### வித்துவமணி

### பிரம்மஸ்ரீ சி. கணேசையர் பாடியவை

வேகமுட னாகமத்தின் மெய்யுணர்வு பெற்றவுயர்
மேலோர் வாழும்
சீதமிகும் பொழில்சூழும் பெருங்குளத்து மேவுமொரு
தேவி யான
தீதுதீர்த்து அருண்முத்து மாரியம்மை பாதங்கள்
தினமும் போற்றும்
ஏதமிலா வடியாரை யிருவினைகள் வந்துக்க
இடர்செய் யாலே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புத்தமுத மெனக்கவிகள் பொழிந்துவரும் நவாலியூர்ப்
புலவ னாய
வித்தகன் க. சோமசுந்த ரம்பிள்ளை நாமத்தோன்
விளங்கும் மேதை
தித்திக்கத் திருப்பதிகம் முதலாகுந் தெள்ளமிர்தம்
சிறப்பி னோடும்
"முத்துமாரி இதுகேட்டு முடியசைக்க வேண்டு" மென
மொழிந்தே தந்தான்
கந்தவேள்கோட் டமுயர்ந்தோங்கு மாவிட்ட புத்தில் வாழ்
கவுணி யன்னான்
செந்தமிழில் பலநூல்கள் செய்தவன்பண் டிதமணியாய்த்
திகழு மாண்பான்
நந்தாத தமிழ்வளமார் நவநீத கிருஷ்ணபா
ரதியாம் நாமன்
தந்தனனால் மிகவோர்ந்து பஞ்சவி ரத்தினமாலை
தக்க வாறே

சித்தனென முனிவனெனச் சிவநேயச் செல்வனெனத்
திகழு மாண்பான்
இத்தமிழ்நா டனைத்துமிக அறிந்தவொரு தமிழ்க்கலைஞன்
ஏத்து சீரான்
"வித்துவான் சி. கணேசையர்" புன்னாலைக் கட்டுவனில்
விளக்கி வாழ்வேன்
அத்தகையான் முத்துமாரி அம்மைதோத் திரம் மொழிந்து
அளித்தான் நன்றே.

அண்டமெலாம் படைத்துக்காத் தளித்துவரு மளப்பிலாத
தேவுக் கன்பால்
கொண்டவொரு பூவைத்தான் தாளிட்டு வணங்கிவரு
குறிப்பின் மேய
தண்டமிழ்தேர் மீனாட்சி முத்துமாரி உயர்தகைக்குத்
தமிழ்சேர் என்புன்
பண்டமீது கண்பார்த்துப் பிழைபொறுத்துக் கருணை மிகப்
பாலிப் பாளே.

திருச்சிற்றம்பலம்

- பொ. செகந்நாதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# தீராதநோய் தீர்க்கும்
# வேலணை பெருங்குளம் அருள்மிகு
# அம்பாள் காவியம்



ஆக்கியோன் :


## வேலாயுதம் சின்னத்தம்பி
(பொலிஸ் பெஞ்சனர்)
வேலணை.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகவுரை

அன்று ஒருமணியிருக்கும் வேலணைப் பெருங்குளம் அம்பாள் ஆலயப் பூசகர் யோகி சோமேந்திரா (கறுவல் ஐயர்) அவர்கள் புங்குடுதீவு மாலை கட்டிக் கந்தையர், ஆதரவுடன் அழைத்து வர வந்துகொண்டிருந்தவர், வேலணைத் துறை முகத்தில் இறங்கினார். போபவர்களும், வருபவர்களும் அவரது பாதங்களைத் தொட்டு வணங்கி, விபூதி பெற்றுப், பூசிக்கொண்டு சென்றனர். யானும் யாழ்ப்பாணம் போக வந்து, அவர்களிருவருடனும் நின்றேன். சற்றுநேரத்தில் ஒரு கார் வந்து துறைமுகத்தில் நின்றது. கார் உரிமையாளர், ஐயா அவர்களை வணங்கி "சுவாமி! வாருங்கள் போகலாம்" என்றார். சுவாமிகளுடன், மற்றவரும் யானும் காரில் ஏறிக்கொண்டோம். "பெருங்குளம் அம்மன் கோயிலுக்கு விடு" என்று உதாரமான தொனியில் யோகிகள் பணித்தார். மெத்தப் பயபக்தியுடன் குறிப்பிட்ட இடத்தில் கார் போய் நின்றது. ஏதோ சில பொருட்களை கோவிலுக்குளிருந்து எடுத்துக்கொண்டு வந்து பழையபடி ஏறிக்கொண்டவர், "காரைப் பண்ணைக்கு விடு" கார் புறப்பட்டு பண்டிதர் உயர் திரு. கா. பொ. இரத்தினம் அவர்கள் வீட்டடியில் ஓடிக்கொண்டிருந்தது. கார் உரிமையாளர் பயபக்தியுடன் "சுவாமி யான் ஊர்காவற்றுறை போகவேண்டுமே" எனக் கீழ்க்குரலில் முறையிட்டார். "தெரியுமப்பா! நீ! அராலிச் சந்தியால் ஊர்காவற்றுறைக்குப்போ! சந்தியில் எங்களை இறக்கி விடு" ஐயா! தனிவழியிலா! இறக்க என்றார். யோகி சிரித்தார். "மகனே பயப்படாதே! அது தனிவழியல்ல, துணையிருக்கு துணைவரும் நீ போ! என்றார். கார் உரிமையாளர் எங்களைக் கொண்டுபோய் மகரிசி (கறுவல் ஐயர்) சொன்ன சந்தியில் இறக்கியவர், தாமும் இறங்கி சுற்றி வணங்கி, அவரின் ஆசியைப் பெற்றுக்கொண்டு போய்விட்டார். நல்ல வெய்யில், பூவரச மரத்தின் கீழ் நாங்கள் மூவரும் நின்றோம். அப்பொழுது இளைஞனாக இருப்பினும், பெரியார்களின் - அருளாளர்களின் மகிமை எனக்கும் தெரிந்திருந்தது. மகரிசிபோன்ற வடிவு - நிறைவு - உதடுகள் உதிர்க்கும் சுவையான அருள் மொழிகள் அத்தனையையும் அவதானித்து மிகு பயபக்தியுடன் நின்றேன். மாலைகட்டியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சுவாமியைக் கூட்டி வந்து நடுவழியில் தவிக்கவிட்டு நிற்கின்றேனே. ஏதும் பிரயாண ஒழுங்குகளின்றி வந்து விட்டேனே" என்று கவலையுடன் கூறினார். பழையபடியும் மகரிசி சிரித்தார். "வெய்யிலா"? என அண்ணார்ந்து பார்த்தார். பொழுதை மறைத்து கருமேகம் தவழ்ந்தன, தவழ்ந்து கொண்டே இருந்தன, ஒரே மந்தாரம்! விறைத்துப் போனேன். எனது மனமுனைப்பை மழுப்பிவிட்ட அவரது அருட்டிறனை வியந்து, அவரது பாதங்களைத் தொட்டு வணங்கி, விபூதிக்குக் கை நீட்டினேன். முருகா! "நீயும் ஆறுமுகம் - அவரும் ஆறுமுகம் (சாரதியும்) இவரும் ஆறுமுகம் (கந்தையர்) யான் மாறுமுகம்" என்று கூறிக்கொண்டு பட்டுப்பையிலிருந்து வெண்ணீற்றைத் தொட்டு நெற்றியில் பொட்டிட்டு என்றும் இளமையாயிரு - உனக்கொரு குறையும் வாராது" என ஆசீர்வதித்தார். எனது பெயரை ஞானசிருட்டியில் அவரே கண்டுகொண்டார். யான் சொல்லவில்லை. சாரதிக்கும் எனது பெயர்தான், கந்தையர் என்பதும் எங்கள் இருவரின் பெயரும் ஒன்றுதான் மகரிசியின்பெயர் சோமேந்திரர் என்பது பிறைசூடும் பொறுளாளரென சிவனைக்குறிப்பது. அது மாறுமுகம். இறைவனுக்கு ஐந்து முகம் ஆதலால் மாறு முகம் என்றார். பிரயாண வசதி இல்லையேயென வருத்தப்பட்டவரை பார்த்து, "அவர் அனுப்புவார் - கார் இப்ப வரும்" என்றார். வேறொருகார் வாயு வேகத்தில் ஊர்காவற்றுறைப் பக்கமிருந்து வந்து சந்தியில் நின்றது. சாரதி இறங்கி, கும்பிட்டு, விபூதி வாங்கி அணிந்து கொண்டு நான் பண்ணைக்குப் போகிறேன் சுவாமி! ஏறுங்கள் என்றார். யோகியும் நாங்களும் ஏறினோம், சென்றோம். இருக்கட்டும்.

இந்த மகரிசிக்கு கொள்ளை ஞானம் கொடுத்தவள் யார்? அதைத்தான் நாங்கள் ஆராய வேண்டும். நம் கண்காண நடமாடும் தெய்வமாயிருந்த அவர் அற்புதத் தெய்வீகத்தை, வேலணை பெருங்குளம் அம்பாளைப் பூசித்து, பூசகராய் இருந்து பெற்றுக்கொண்ட பெரும் பேறல்லாவா, யாழ்ப்பாணத் தமிழரில் சைவர்களில் மகரிசி கறுவல் ஐயர் அவர்களை அறியாதவர்களும், போற்றாதவர்களுமில்லை. அவருக்கு புகழையும், போதத்தையும் ஈந்த புண்ணிய சொரூபியல்லவா நமது அம்பாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த ஞானியுடன் இளமை தொடக்கம் நண்புபூண்டு அம்பாளுக்குத் தொண்டு செய்து வளர்ந்தவர்தான் வேலணைப் பெருங்குளத்தம்பாள் காவியமியற்றிய வேலாயுதர் சின்னத்தம்பி அவர்கள். இவர் இருபத்து நான்கு ஆண்டுகள் அரசினர் காவற்றுறை சேவையாளராயிருந்து இளைப்பாறியவர். இருபத்தெட்டு ஆண்டுகள் அந்த அம்பாளின் அருளால் உபகாரச்சம்பளமும் பெற்றுக்கொண்டு சேமமுற வாழ்ந்தவர். பூசகராயிருந்த மகரிசியின் அறிவில் கலந்து, அம்பாளின் அருளில் கனிந்து, சொட்டிய தேன்துளிகள்தான், அவரது "தீராதநோய் தீர்க்கும் வேலணை பெருங்குளம் அருள்மிகு அம்பாள் காவியம்" இதனை அன்புடன் "மகன் தந்தைக் காற்றும் உதவி இவன் தந்தை என்னோற்றான் கொல் என்னும் சொல்" லுக்கு இலக்காக அவரது புதல்வர்கள் சொக்கலிங்கம், செல்வராசா ஆகிய இருவரும் இக்காவியத்தை இனிதுற அச்சிட்டு இலவசமாக வினியோகிக்க முன்வந்தமை சைவ தமிழுலகை மகிழ்வூட்டுவதாகும் என்பதில் ஐயமில்லை.

இன்னும் "வள்ளுவப்பிள்ளையான் செய்தொண்டு" என்ற தலைப்பில் "பறையனோ பக்தியில் நந்தனென்பாரே! சீராக உள் வீதி பந்தலுமமைத்தான், சித்திரமுகன் கோயிலுள்ளொன்றமைத்தான், நேராக அம்மன் தேர் அடித்தளமமைத்தான்" என்று அவர் தொண்டுகளை எண்ணிய புலவர் சின்னத்தம்பி அவர்கள், தம்மவர்கள் அந்தத் தொண்டெலாம் புரிந்த வள்ளுவப் பிள்ளையானைக்கூட, கோயிலுக்குள் கும்பிட விடவில்லையாம். ஆனால் புலவர் அவருக்கு அவரது அம்பாள் தொண்டுக்கு - உபகாரம் கொடுக்க வேண்டுமே என்று ஆசைப்பட்டு அந்த பக்தன் "நித்தியானந்தமாம் பதவி பெற்றானே" என்றும், கண்ணப்பன் பெற்ற அருள் அவருக்கும் கிடைத்து விட்டது என்றும், பாராட்டி முடிப்பதைச் சைவத் தமிழ் உலகு உன்னிப் பார்க்க வேண்டும். கருணைக்கடலாகிய பெருங்குளத்தம்பாள், திருக்கேதீஸ்வரப் புணருத்தாரணப் பணியில் பெருந்தொண்டாற்றி புகழ் பெற்ற அருள் திரு. செல்லப்பா சுவாமிகள் அவர்களையும் தமக்குத் தொண்டராய் ஈந்திருப்பதையும் பார்த்து மகிழ்வோமாக.

இப்படிக்கு,

"ஜனகாபுரி"
43, ஜெயந்தி நகர்,
கிளிநொச்சி.

**பண்டிதர் மு. ஆறுமுகம் அவர்கள்**
தலைவர்,
குருகுலப் புலவர் வட்டம் - கிளிநொச்சி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருள் திரு. செல்லப்பா சுவாமிகளின் பாராட்டுரை !

வேலணை பெருங்குளம் அருள்மிகு அம்பாள் காவியத்தைப் பாடிய வேலாயுதர் சின்னத்தம்பி அவர்களை எனக்கு சிறுவயதிலிருந்தே தெரியும். இவர் என்னோடும், சோமேந்திரர் (கறுவல் ஐயர்) அவர்களோடும் நெடுநாட்களாகப் பழகி நண்பு கொண்டிருந்தவர். இவர் இளமைப்பராயத்திலே மட்டுநகர் சென்று மாந்தீரகத்தை நன்கு கற்று வந்து ஊரிலும், யாழ்ப்பாணத்திலும், பலமக்களின் பேய் பிணிநோய் துன்பங்களையும் விலக்கிப் பெயர் பெற்றவர். வேலணை பெருங்குளத்தம்பாள் காவியத்தை இலைமறை காய்போல் பொருள் கொண்டவராயிருந்து நன்கு இனிதுறப் பாடியிருக்கிறார். மக்களுக்கு வரும் அம்பாள் நோய்கள் யாதும், வராமல் இருக்க

"நாளியரை நேரமிடர் அணுகாமல் காப்பாய்

நாரணியே வேலணை பெருங்குளத்தாயே"

என்று இனிதுறப் பாடியிருப்பதும் மெச்சத்தக்கது. அதுமட்டுமல்லாமல், இவர் தன் இளமைப் பராயத்திலே திருக்கேதீஸ்வரத்தில், மண்ணில் மறைந்து கிடந்து எடுக்கப்பட்ட சிவலிங்கத்தை தற்பொழுது அமைக்கப்பட்ட இடத்திற்கு எடுத்துச் செல்வதற்கு, தாமும் ஒரு தொண்டராக நின்று காவி, பணிபுரிந்து திருக்கேதீஸ்வரத்தானின் திருவருளையும் பெற்றார். இவர் அரசினர் பொலிஸ் காவற்றுறையில் தனியே பல காடுகள் போன்ற இடங்களில் பயமின்றி நன்கு கடமைகள் புரிந்து, அரசின் பல சான்றிதழ்களையும் பெற்றவர். பெருங்குளத்தம்பாளின் அருளால் எண்பத்தி ஒருவயதுவரை சேமமுற வாழ்ந்து, நித்தியானந்தமாய் வாழ்கின்றார் எனப்பாராட்டுகிறேன்.

இப்படிக்கு,

வ. க. செல்லப்பா

நாவலர் மடம், வேலணை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீராத நோய் தீர்க்கும் வேலணை பெருங்குளம் அருள்மிகு அம்பாள் காவியம்

ஒருகோடு மிருசெவியு மைங்கரமு மாகி
உலகுதனில் முன்வந்த கற்பகக் களிறே
குருமணிய தாகநற் கொம்பொன் றொடித்துக்
குலவுமறை பாரதக் கதையை வரைகின்ற
அருமறையுள் ஒளிவளரு மாதியுமை பாலா
அடியிணைகள் சரணமது ஓதவல் லேனின்
திருவருளை முன்னிட்டு உரைகாவி யத்தில்
ஒருபிழையும் வாராமல் உன்னருளைத் தாராய்

கற்புநிறை திருநீல முகிலழகு மாதே
கன்னியே உன்றனுட காவியம் சொல்ல
சொற்பிழைகள் தப்பிதம் யாதுவரு மோதான்
துணையாக இதுவேளை அருள்புரிவாய் அம்மா
கற்பவரும் கேட்பவரும் சொற்பிழை பொறுப்பீர்
கண்டபடி வாயினில் வந்தவகை எல்லாம்
உற்றதோர் காவியம் உளறினேன் அம்மா
உன்துணையே பெருங்குள முறைந்தநாயகியே

சீர்ஏறு யாழ்ப்பாணப் பகுதியைச் சேர்ந்த
தீவேழுள் வேலணை பெருங்குள முறைந்த
கார்ஏறு முகிலனைய கவுமாரி வந்த
காரணந் தன்னைமூ தாதைகள் உரைத்தார்
பேர்ஏற வேகட்ட மாதனென் றொருவன்
பெருமையுறு அம்பிகா கோயிலாய் ஆக்க
தேர்ஏற லங்காரி ஆக்கியே ஆலயத்
திருப்பணிகள் செய்தவர் நாநாத பிள்ளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னா ளிருந்தவர் பரம்பரையில் உடையார்
அம்பல வாணராம் ராமலிங் குடையார்
சொன்னாலும் அவர்பேர் துலங்குமே அம்மன்
சுருதிமுறை தவறாத திருவிழாப் பூசைகள்
முன்னாள் தொடுத்தவர்கள் ஆதீன கர்த்தாவாய்
முழுதுமே திருப்பணிகள் முடித்தவர்களாமே
இன்னா ளிலே அம்மன் வழிபாடு செய்வார்
இன்பமுடன் அம்மன்முன் உரிமைபெற் றார்கள்

அம்மனது காவியம் பாடஅறி யேன்யான்
அட்ட கருமங்களைச் செய்துமறி யேன்யான்
ஓம்மென்னும் மெழுத்தினது பொருளும்அறி யேன்யான்
ஓதவே உன்புகழை யாதுமறி யேன்யான்
எம்மனதுன் அடிவிட்டு நீங்கா திருக்க
எமக்குநல் வரமது கொடுத்தருளு தாயே
சிம்மத்தி லேறிவினை தீர்த்தருள வாவா
தேவியே வேலணை பெருங்குளத் தாயே

ஆசார மாய்வந்து உன்பூசை பொங்கல்
அடியார்கள் செய்துபரி சளித்துவரும் வேளை
கூசாமல் ரதமேறி வெளிவீதி வந்து
குறைகளைத் தீர்த்துநல் வரமது கொடுப்பாய்
தேசாதி பதிஇந்திரன் முறையிட்டு வரவே
தேவருக் காகவே கடுந்தவ சிருந்தாய்
பூசா பலப்புண்ய வதியாகி வந்தாய்
பூவையே வேலணை பெருங்குள முறைந்தாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்துமா மறையாளர் வந்தடி வணங்க
ஏழுலகு கன்னியர் இளங்கவரி வீச
நொந்துவரும் பிணியாளர் நோய்துயர் அகற்றி
நுட்பநெறி யாய்யுனது விரதமது கொண்டு
சிந்துபல மந்திரத் தால்வேள்வி ஆற்றி
திருநீ றணிந்துனது காவலது செய்ய
வந்தபிணி நீங்கஅருள் தந்துதவு தாயே
வனிதையே வேலணை பெருங்குளத் தாயே

ஈசனின் இடப்பாகம் ஏற்றுநீ நின்றாய்
என்றுமுன் பாலரைக் காக்கவே வந்தாய்
பாசமொடு வேல்சூலம் மழுவது தரித்தாய்
பகர்உடுக் கொடுகரக பத்திரி பிடித்தாய்
கூசாமல் மகுடா சுரன்உயிர் வதைத்தாய்
கோவலன் தேவியாய் மதுரையை எரித்தாய்
வாசமுறு மணமாலை பூசித மணிந்தாய்
வனிதையே வேலணை பெருங்குள முறைந்தாய்

உம்பர்புகழ் மாரியென் றுன்னையெல் லோரும்
ஓதியே வேதிமார்கள் பூசையது செய்வார்
அன்புள்ள தாயென்று நம்பிவந் தோர்க்கு
அவமிருத் திடையூ றவஸ்தைகள் விடாதே
கும்பமது வைத்துமே உன்பூசை செய்தேன்
கொடியயெம படர்மூவர் காலனணு காமல்
செம்பவள வாய்திறந் தேவர மளிப்பாய்
தேவியே வேலணை பெருங்குளத் தாயே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊழ்வினையால் ஈளையொடு மூலம் வியாதி
உக்கிரம தாய்பக்க வாய்வண்ட வலியும்
காளியொடு வைரவர் களும்பல பாசாசும்
கருநாக்கர் நாவீ றுடன்கிரக பகையும்
சூளவரு பரிகலம் கோதாரி அம்மை
சூடான பொக்கிளிப் பான்சின்ன முத்தும்
நாளிஅரை நேரமிடர் அணுகாமல் காப்பாய்
நாரணியே வேலணை பெருங்குளத் தாயே

எட்டிரண் டாறுகலை யாகிவந் தாயே
ஏமாம் பரிகலம் சூளவந் தாயே
கட்டழகர் நல்வீரர் காடேறி காத்தான்
கருதறிய பாவாடை ராயன் எறிமாடன்
இட்டமாய் உன்பூசை வேள்விக்கு வந்து
இனியமுத் திரைவாங்கி வீற்றிருந் தனரே
திட்டமாய் அக்கினி கேசமது கொண்டாய்
செல்வியே வேலணை பெருங்குள முறைந்தாய்

ஏகமுறு ஆயிர முகங்களுனக் குண்டு
என்றுமீ ராயிரம் கண்களுனக் குண்டு
மோகமுறு மூவாயிரம் கலைகளுனக் குண்டு
முக்கோண மானதிரு சக்திபரை யென்று
வேகமுறுவீ ராவேசக் கோவமது கொண்டு
வேடிச்சி ரூபமொடு வேடனுடன் சென்று
தாகமுறு வேலணை பெருங்குள முறைந்தாய்
தையலே சிவமுத்து மாரியென் தாயே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐயமுறு பரிகலத் தழகுபெறு பேச்சி
ஆனந்த மாய்நடன மாடுமக மாரி
வையமதில் காளியின் வடிவமது கொண்டாய்
வந்துமே சிவனுடன் வாதாடி நின்றாய்
பையரவு நாகமது சடைமீ தணிந்தோன்
பாவையே பரமகல் யாணியென் தாயே
செய்யநற் கரகத் தழகியென வந்தாய்
சேயிழையே வேலணை பெருங்குள முறைந்தாய்

ஒளிவீசும் நவரத்தின மணிமகுட மின்ன
உத்தமியின் மார்பிலணி முத்தாரம் மின்ன
தெளிவான கரமிசை படைக்கல மிலங்க
தேவியே சிங்கவா கனமேறி வந்தாய்
அழியாச் சிலம்பொடும் பிரம்பது பிடித்தாய்
அன்னையே அக்கினி கேசமது கொண்டாய்
விழியான உன்கருணை தந்தாள வாவா
வேலணை பெருங்குளக் கரையுறையு மாதே

ஓதுமறை யானசிவ மாரியென் தாயே
உம்பர்புகழ் காவினில் வீற்றிருந் தாயே
வாதுபுரிந் தேநடன மாடிவந் தாயே
வானவர்க ளதுதுயர மகற்றிவந் தாயே
பாதுகாத் தெங்களை ஆளவந் தாயே
பாரினிற் கற்புநிறை பத்தினித் தாயே
தீதுகள் அகற்றியெமை ஆளநீ வாவா
தேவியே வேலணை பெருங்குளத் தாயே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஔவுடனே முக்கோண அட்சர மழுத்தி
ஆறா தரங்களுடனேகொலு விருத்தி
சவ்வுடன் சிறியும் கிலியுமவை யிட்டு
சாயுச்ச சிவமாரி யெனநாம மிட்டு
உவ்வென்றும் நவ்வென்றும் உயிர்மறைய தாகி
ஓம்நமசி வாயவென உள்ளே இருத்தி
பரிவுடன் பூசைஅபி சேகமுஞ் செய்தார்
பாவையே பரமகல் யாணியென் தாயே

அக்கர மணிந்தசிவ சக்தியும் நீயே
ஆறுமுக நாதனை யருள்சக்தி நீயே
சொக்கர்மீ னாட்சியாய் வந்ததுவும் நீயே
தக்களன் சிறியனுட பாடல்தன் மீதே
தயவுவைத் தருள்கிருபை தரவேணும் நீயே
சக்கர மணிந்தவன் தங்கையும் நீயே
சக்தியே வேலணை பெருங்குளத் தாயே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பலவரிக் காவியம்

உத்தமியே உன்பூசை செய்வே தியராம்
உண்மையுட னேகறுவல் ஐயர் தமக்கும்
பக்தியொடு பூசைஅபி சேகம்செய் தோர்க்கும்
பாரிலுள பாலர்பத் தினிமார் தமக்கும்
சித்தமகிழ் வோடுனது காவிய முரைத்தோன்
சிறியனேன் சின்னத்தம்பி யாமென் றனுக்கும்
நத்திவந் துன்கருணை தரவேணு மம்மா
நாயகியே வேலணை பெருங்குளத் தாயே

கொக்கிற கணிந்தவன் தங்கையென வந்தாய்
குமரனைப் பெற்றமக மாரியென வந்தாய்
தக்கனை வதைத்தவன் தாயாகி வந்தாய்
தாரணியிற் பாலரைக் காக்கவே வந்தாய்
சொற்கடங் காதவற் குன்முத் தெறிந்தாய்
துரந்தரி துட்டரை அடக்கியே வைத்தாய்
தக்கதென வேலணை பெருங்குள முறைந்தாய்
தையலே சிவமுத்து மாரியென் தாயே

பெற்றதாய் பிள்ளையைத் தள்ளுவது முண்டோ
பிழைசெய்த போதுபிற் கொள்ளுவது முண்டோ
தற்பொழுது என்பிழை பொறுத்தருள வேண்டும்
தாயான நவகோடி சக்தியென் தாயே
உற்றதோர் காவியத் தோடகவல் சிந்து
உன்னத மானதா லாட்டதுகள் பாட
வெற்றிபெறு வேலணை பெருங்குள முறைந்த
வேதாந்த சிவமுத்து மாரியென் தாயே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மானேநீ கயிலாய மலையி லிருந்து
மகிமைசெறி வேலணை பெருங்குளம் வந்தாய்
தேனே உனக்கினிய கரகமது வைத்து
செவ்வலரிப் பூவால் அலங்கரித் துன்னை
வானுலகி லுள்ளபல கனிவகைகள் புஸ்பம்
வைத்துமே உன்மடை பரப்பினே னம்மா
நானே உனக்கினிய பாலனென் றெண்ணி
நற்கிருபை தந்தருள்க வந்திந்தவேளை

கங்கையென வந்தசிவ காமசுந் தரியே
காங்கேச னுக்கன்னை யானபத் தினியே
சங்கையுள தேவர்சிறை மீட்கவென் றெண்ணி
சக்திவேல் அதுசுப்பிர மணியருக் கீந்தாய்
மங்கையே கடல்வண்ணன் தங்கையே யென்றும்
மதுரா புரிக்கரசி யான மீனாட்சி
வெங்கய முகன்வலி தொலைத்தவனை ஈன்றாய்
வேலணை பெருங்குளக் கரையுறையு மாதே

மனதில்வரு பிழையதனை மனமுமறி யாது
மலர்விழியி லுள்ளபிழை விழியுமறி யாது
கரமதனி லுள்ளபிழை கரமுமறி யாது
கருதுமுடல் செய்தபிழை உடலுமறி யாது
எப்பிழைதான் என்றாலும் பொறுத்துமன தொன்றாய்
எங்களுக்கு நற்கிருபை தந்தருள்வாய் அம்மா
பாரினிற் தலைவியாய் வந்தவதரித்த
பாவையே பெருங்குளக் கரையுறையு மாதே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வள்ளுவப் பிள்ளையான் தொண்டு


பேராம் பெருங்குளத் தம்மனுக் கங்கே
பிள்ளையான் செய்ததிருப் பணியதனை யெவரும்
பாரோர் மகிழ்ந்தன்பு கொண்டெவரு மிவனை
பறையனோ பக்தியில் நந்தனென் பாரே
சீராக உள்வீதி பந்தலுமமைத்தான்
சித்திர முகன்கோயி லுள்ளொன் றமைத்தான்
நேராக அம்மன்தேர் அடித்தள மமைத்தான்
நித்தியா னந்தமாம் பதவிபெற் றானே.

முற்றிற்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எது நடந்ததோ அது நன்றாதவே நடந்தது.
எது நடக்கிறதோ எது நன்றாகவே நடக்கிறது.
எது நடக்க இருக்கிறதோ அதுவும் நன்றாகவே நடக்கும்.
உன்னுடையது எதை இழந்தாய். எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய்? அதை நீ இழப்பதற்கு.
எதை நீ படைத்திருந்தாய். அது வீணாவதற்கு.
எதை நீ எடுத்துக் கொண்டாயோ. அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதைக் கொடுத்தாயோ. அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ. அது நாளை மற்றொருவருடையதாகிறது.
மற்றொரு நாள் அது வேறொருவருடையதாகும்.

'இதுவே உலக நியதியும்
எனது படைப்பின் சாராம்சமுமாகும்'

பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org